பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
12 09 2026 SATURDAY 6.30 PM

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி முன்மொழிந்த இந்தியாவின் பிரகடனத்தை உறுப்பு நாடுகள் ஒருமனதாக ஏற்றுக்கொண்டுள்ளன.

2) தமிழகத்தின் பெருமையை உலக அரங்கில் எடுத்துச் செல்வதற்கு பிரதமர் முக்கியத்துவம் அளித்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3) தமிழகத்தில் காலியாக உள்ள 4 ஆயிரத்து 724 செவிலியர் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு அருண்ராஜ் கூறியுள்ளார்.

4) தேனி, திண்டுக்கல், கரூர் உள்ளிட்ட 14 மாவட்டங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5) வியட்நாம் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Prajwal Dev** — பிரான்சின் **Constantin Bittoun** இணை பட்டம் வென்றது

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி முன்மொழிந்த இந்தியாவின் பிரகடனத்தை உறுப்பு நாடுகள் ஒருமனதாக ஏற்றுக்கொண்டுள்ளன.

புதுதில்லியில் இன்று தொடங்கிய பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் முதல் நாளில் பிரதமர் இந்த பிரகடனத்தை வெளியிட்டார்.

உறுப்பு நாடுகள் இதனை ஏற்றுக்கொண்டபின் நன்றி தெரிவித்து பேசிய அவர், இந்தியா முன்வைத்த கோரிக்கைகளை உறுப்பு நாடுகள் ஏற்றுக்கொண்டிருப்பது தெளிவான பாதையில் நாம் இணைந்து முன்செல்கிறோம் என்பதை காட்டுவதாக குறிப்பிட்டார்.

பொறுப்புகளை பகிர்ந்துகொண்டு ஆக்கப்பூர்வமாக செயல்பட்டு, அதன் பயன்களை பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மாறிவரும் உலகச்சூழலுக்கு ஏற்ப பழமையான சர்வதேச மற்றும் பன்னாட்டு அமைப்புகளின் பிடியிலிருந்து சுதந்திரமாக செயல்படுவதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாக பிரதமர் குறிப்பிட்டார்.

ஐ நா பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தங்கள் கொண்டுவருவதற்கு இனியும் காலம் தாழ்த்தக்கூடாது என்றும் திரு நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

<<<<<>>>>>>

தமிழகத்தின் பெருமையை உலக அரங்கில் எடுத்துச் செல்வதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி முக்கியத்துவம் அளித்து வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் பிரிக்ஸ் உச்சி மாநாட்டிற்கு வருகை தந்துள்ள சீன அதிபர் திரு **Xi Jinping**-கிடம் ராமேஸ்வரத்தில் உள்ள அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோவிலின் சிறப்பையும், அதன் ஆன்மீக மற்றும் பண்பாட்டு பெருமையையும் எடுத்துரைத்திருப்பது பெருமை அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் தொன்மை சிறப்புமிக்க தமிழகத்தின் பண்பாட்டையும், பெருமையையும் பிரதமர் திரு நரேந்திர மோடி உலகிற்கு கொண்டு செல்வதற்கு தமது நன்றியை தெரிவித்துக் கொள்வதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

தமிழகத்தில் காலியாக உள்ள **4** ஆயிரத்து **724** செவிலியர் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற மழைக்கால நோய் தடுப்பு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில்

பேசிய அவர், இந்த பணியிடங்களை நிரப்பும் பணி, நேர்மையாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

அரசு மருத்துவமனைகளில் வசதிகளை மேம்படுத்தவம், உள்கட்டமைப்பை விரிவுபடுத்தவும் மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டை விட இந்தாண்டு டெங்கு பாதிப்பு சற்று அதிகரித்திருந்தாலும், தற்போது படிப்படியாக குறைந்து கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மாநிலத்தில் டெங்கு காய்ச்சலால் உயிரிழப்பு ஏதும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கொசு ஒழிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

தண்ணீர் தேங்குவதை தடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், மக்களிடையே இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அரிகாரிகளுக்கு திரு அருண்ராஜ் வலியுறுத்தினார்.

<<<<<>>>>>>

மனித — வனவிலங்கு மோதலை தடுக்க மாநில அரசு 20 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாக வனத்துறை அமைச்சர் திரு ரஞ்சித்குமார் தெரிவித்துள்ளார்.

உதகையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பழங்குடியினர் வாழும் பகுதிகளில் சாலைகள், சோலார் மின் விளக்குகள், அகழிகள் உள்ளிட்டவை அமைக்க இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

முன்னதாக, நீலகிரி கரும் வெருகு மற்றும் நெட்டைகாலி வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் புத்தாக்க வளர் மையத்தை அமைச்சர் திறந்துவைத்தார்.

<<<<<>>>>>>

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, இன்று முதல் நாளை மறுநாள் வரை சென்னையிலிருந்து அனைத்து மாவட்டங்களுக்கும் கூடுதலாக சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் இருந்து வழக்கமாக இயக்கப்படும் ஆயிரத்து 99 பேருந்துகளுடன் கூடுதலாக ஆயிரத்து 255 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர் விடுமுறையை பயன்படுத்தி கூடுதல் கட்டணம் வசூலித்த **400** ஆம்னி பேருந்துகளின் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

ஆந்திராவைப்போல தமிழகத்திலும் விநாயகர் சதுர்த்தி பந்தல்களுக்கு மாநில அரசு இலவச மின்சாரம் வழங்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தமிழகத்தில் அமைக்கப்படும் விநாயகர் சதுர்த்தி பந்தல்களுக்கு வணிகக் கட்டணம் வசூலிக்கப்படுவதாகவும் கூறியுள்ளார்.

இதனை ரத்து செய்து எவ்வித நிபந்தனையும் இன்றி இந்த பந்தல்களுக்கு இலவச மின்சாரம் வழங்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>>

தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் **6-**ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், அதற்கான

முன்னேற்பாட்டுப் பணிகளை திருப்பூர் மாவட்ட ஆட்சியர் திரு மணீஷ் நாரணவரே இன்று நேரில் ஆய்வு செய்தார்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்படும் பாதுகாப்பு அறைகள், வாக்கு எண்ணும் மையங்கள், தேர்தல் மேற்பார்வையாளர்கள் அறை, ஊடக மையம் அமையவுள்ள இடங்கள் ஆகியவற்றை அவர் பார்வையிட்டார்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்தும் அதிகாரிகளுடன் திரு மணீஷ் நாரணவரே ஆய்வு செய்தார்.

<<<<<>>>>>>

முதுபெரும் தமிழறிஞர் பேராசிரியர் சாலமன் பாப்பையாவின் இறுதிச்சடங்குகள் மதுரையில், அரசு மரியாதையுடன் இன்று நடைபெற்றது.

வயது முதிர்வு மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக நேற்று மதுரையில் அவர் காலாமானார்.

<<<<<>>>>>>

பிரதமரின் ஸ்வநிதி திட்டத்தின்கீழ், நடைபாதை வியாபாரிகள் கடனுதவி பெற்று பெருமளவு பயனடைந்து வருகின்றனர்.

எளிய முறையில் எவ்வித உத்தரவாதமும் இன்றி வழங்கப்படும் இந்த கடன், தங்களுக்கு பேருதவியாக உள்ளது என்று நாமக்கல்

மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

***<u>( Sound Byte — பயனாளிகள் - 36 Sec. )</u>***

<<<<<>>>>>>

தமிழகத்தின் தேனி, திண்டுக்கல், கரூர் உள்ளிட்ட 14 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***<u>(Sound Byte — வி ஆர் துரை — 43 Sec. )</u>***

<<<<<>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

தூத்துக்குடி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கைப் பணிகளை மாநில அமைச்சர்கள் திரு மதன்ராஜா, திரு ஸ்ரீநாத் ஆகியோர் இன்று ஆய்வு செய்தனர்.

------------

கன்னியாகுமரி மாவட்டத்தின் புதிய காவல் கண்காணிப்பாளராக திரு அன்சுல் நாகர் இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

-------------------

கடலூர் மாநகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை மூலம் குப்பை சேகரிக்கும் பணிகளை ஆட்சியர் திரு சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று ஆய்வு செய்தார்.

------------------

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு 7 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளதால் பரிசல் இயக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

வியட்நாம் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Prajwal Dev** — பிரான்சின் **Constantin Bittoun** இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 6-1, 7-6 என்ற செட் கணக்கில், ஜப்பான் **Yamato Sueoka** — **Naoki Tajima** இணையை வென்றது.

-------------------

எகிப்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Aradhya Kshitij** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

----------

**ஆசிய Cadet கோப்பை வாள்வீச்சு சாம்பியன் போட்டி, சென்னையில் நவம்பர் மாதம் 20-ஆம் தேதி தொடங்கி, 23-ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

**30 நாடுகளைச் சேர்ந்த 500-க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்கவுள்ளனர்.**

**<<<<<END>>>>>>**